**ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்**

**வாசிக்க**: **ரோமர்** 12:10 **சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்**

பட்சமாயிருங்கள் என்றால்….. இதமான அன்பு என்று அர்த்தமாகும். இதமான என்றால்… வெயில் காலத்தில் குளிர்ச்சியான இடத்தில் இருப்பது போலவும், குளிர் காலத்தில் வெதுவெதுப்பான இடத்தில் இருப்பது எப்படி இருக்குமோ அதுதான் இதமானது.

நாம் நம்முடைய சொந்த அண்ணன், தம்பி, அக்கா, தங்கச்சியை எப்படி இதமாகவும் இதயப்பூர்வமாகவும் அன்பு செலுத்துவோமோ அதுப்போல நாம் ஒருவரையொருவர் சகோதர சிநேகத்துடன் நேசிக்க வேண்டும். பெற்றோர் தங்கள் சொந்த பிள்ளைகள் மேல் எப்படி பட்சமாயிருப்பார்களோ அதுப்போல நாம் ஒருவர் பேரில் ஒருவர் பட்சமாயிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நம்மேல் எப்படி இதமான அன்பு செலுத்தினாரோ அதுப்போல கிறிஸ்தவர்களாகிய நாம் சகல மனிதர்களையும் நேசிக்க வேண்டும்.

ஸ்காட்லாந்து நாட்டில் 1848-ம் ஆண்டு மேரி மிட்ஷெல் ஸ்லெஸ்ஸர் பிறந்தார். அவருடைய தாயாரின் அறிவுரையின்படி ஆப்பிரிக்க மக்களை நேசித்து அவர்களுக்கு ஊழியம் செய்ய ஆர்வம் கொண்டு, ஆப்பிரிக்கா மக்களுக்காகத் தன் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார்.

மேரி தனது 26வது வயதில் ஆப்பிரிக்காவிற்கு ஊழியத்திற்குச் சென்றார். அங்குள்ள மக்கள் மனிதர்களின் மாம்சத்தை விரும்பி சாப்பிடுபவர்களாக இருந்தார்கள். அத்துடன், அவர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்ததால் அந்த குழந்தைகள் தீய ஆவியினால் அனுப்பப்பட்ட சாபம் என்று நம்பி அக்குழந்தைகளை கொலை செய்யும் பழக்கமுடையவர்களாக இருந்தனர்.

மேரி இப்படிப்பட்டவர்கள் மத்தியில்தான் இயேசுவின் அன்பை பகிர்ந்துக் கொண்டாள். சில ஆண்டுகளுக்குப் பின் மேரி அதிக நோய்வாய்ப்பட்டு திரும்பி ஸ்காட்லாந்து செல்ல நேர்ந்தது. தன் உடல் ஆரோக்கியமானதும் மீண்டும் ஆப்பிரிக்காவில் ஊழியத்தைத் தொடர்ந்தாள்.

மேரி தனது 67வது வயதில் காலமானார். அவர்கள் மரிக்கும் காலம் வரை ஆப்பிரிக்க மக்களுக்காகவே வாழ்ந்தார். அவர் மரிக்கும் பொழுதும் ஆப்பிரிக்க மக்களின் மேல் பட்சமாயிருந்தார்.

**கேள்விகள்**:

1. பட்சமாயிருங்கள் என்றால் என்ன?

2. இதமான என்றால் என்ன?

3. யாரைப்போல் பட்சமாயிருக்க வேண்டும்?